# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மானியக் கோரிக்கை எண்—26

# அறிவிப்புகள்
# 2014—2015

திரு. ஆர். வைத்திலிங்கம்
வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## புதிய அறிவிப்புகள் 2014 –15

### 1. நகர குடிசைப்பகுதிவாழ் இளைஞர்களுக்கு திறன்மேம்பாடு பயிற்சி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2014–2015–ஆம் ஆண்டில் தமிழ்நாடு திறமை மேம்பாட்டுக் கழகம் மூலமாக 5,000 குடிசைப்பகுதிவாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய பயிற்சிகள் வழங்கப்படும்.

## 2. கூட்டு உள்ளூர்த் திட்டப் பகுதிகள் விரிவாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கடலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் கூட்டு உள்ளூர்த் திட்டப்பகுதிகள் (Expansion of Composite Local Planning Areas) விரிவாக்கப்படும். கூட்டு உள்ளூர்த் திட்டப் பகுதிகள் விரிவாக்கப்படுவதன் மூலம் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் முழுமைத் திட்டம் தயாரிக்கப்படும்.



## 3. தனித்த உள்ளூர்த்திட்டப் பகுதிகள் உருவாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** வேதாரண்யம், ஜோலார்பேட்டை ஆகிய நகராட்சிப் பகுதிகள் புதிய தனித்த உள்ளூர்த் திட்டப் பகுதிகளாக (Single Local Planning Areas) அறிவிக்கப்படும். இப்பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் முழுமைத் திட்டம் தயாரிக்கப்படும்.

## 4. தனித்த உள்ளூர்த் திட்டப் பகுதிகளைக் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவித்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தேனி அல்லிநகரம் மற்றும் அரக்கோணம் ஆகிய தனித்த உள்ளூர் திட்டப்பகுதிகளைக் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவிக்கப்படும். இதன் மூலம் முறையற்ற நகர வளர்ச்சியைத் தடுக்க முடியும். அருகிலுள்ள பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிப் பகுதிகள் இணைக்கப்படுவதால் திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் முழுமைத் திட்டம் தயாரிக்கப்படும்.



## 5. போக்குவரத்து நெரிசலைக் குறைத்துச் சீரான போக்குவரத்தை உறுதி செய்ய நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

நகரங்களின் அளவு பெருகி வருவதும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருவதும் அதிக அளவிலான போக்குவரத்துத்தேவையையும், சாலைகளில் நெரிசலையும் உருவாக்கியுள்ளது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 10 நகராட்சிகளுக்கு தலா ரூ.50.00 இலட்சம் ரூபாய் வரையிலும் மொத்தம் ரூ.5.00 கோடி நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படும்.

## 6. பூங்காக்களை மேம்படுத்த உள்ளாட்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

பொதுமக்களின் நலனுக்காக பூங்காக்களை மேம்படுத்தி பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பூங்கா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 50 பூங்காக்களை மேம்படுத்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா ரூ.10.00 இலட்சம் வரை மொத்தம் ரூ.5.00 கோடி மானியமாக வழங்கப்படும்.



## 7. பசுமைக் கட்டடங்களை ஊக்குவிக்க ஆராய்வு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பசுமைக் கட்டடங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் நடைமுறைகள் குறித்து ஒரு ஆராய்வு ரூ.5.00 கோடி செலவில் மேற்கொண்டு பசுமைக் கட்டடங்களை ஊக்குவிக்க தகுந்த நடைமுறைகள் உருவாக்கப்படும்.

## 8. கோயம்பேடு மொத்த விற்பனை உணவு தானிய அங்காடியில் சேமிப்பு கிடங்கு அமைத்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வணிக வளாகத்தில் கட்டப்பட்டு வரும் மொத்த விற்பனை உணவு தானிய அங்காடி பகுதியில் சேமிப்பு கிடங்குக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ரூ.3.00 கோடி கட்டுமான மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் சேமிப்பு கிடங்கு கட்டடம் கட்டப்படும்.



## 9. கோயம்பேடு மொத்த விற்பனை உணவு தானிய அங்காடி வளாகத்தினுள் ஒரு வணிக வளாக கட்டடம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கோயம்பேடு மொத்த விற்பனை உணவு தானிய அங்காடி வளாகத்தினுள் வணிக பகுதியில் கடைகள், உணவகம், வங்கி, அலுவலக உபயோகம், தானியங்கி வங்கி மையம் உள்ளிட்ட வசதிகளுடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூ.5.00 கோடி கட்டுமான மதிப்பீட்டில் ஒரு வணிக வளாகம் கட்டப்படும்.

## 10. தேசிய நெடுஞ்சாலை–45–இல் உயர்மட்ட சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆராய்வு மேற்கொள்ளுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தேசிய நெடுஞ்சாலை–45–ல் ஏற்படும் வாகன நெரிசலை குறைப்பதற்காக திரிசூலம், சென்னை அறிஞர் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து செங்கல்பட்டு வரையில் தேசிய நெடுஞ்சாலையில் உயர்மட்டச்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு குறித்த ஆராய்வு அறிக்கை தயாரிக்கப்படும்.